## நவம்பர் – 17 – சனி

### புனித ஹங்கேரி எலிசபெத்

### “மனந்தளராமல் எப்பொழுதும் இறைவனிடம் மன்றாட வேண்டும்” – லூக்18:1

**முதல் வாசகம் : 3 யோவான் 1 : 5 – 8**

அன்பார்ந்தவரே, நீர் சகோதரர்களுக்கு, அதுவும் அறிமுகமில்லாச் சகோதரர்களுக்குச் செய்தவற்றையெல்லாம் பார்க்கும்போது நீர் நம்பிக்கைக்குரியவர் என்பது தெளிவாகிறது.அவர்கள் திருச்சபையின் முன்னிலையில் உமது அன்பைக் குறித்துச் சான்று பகர்ந்தார்கள். எனவே நீர் அவர்களைக் கடவுளுக்கு உகந்தமுறையில் வழியனுப்பிவைத்தால் நல்லது.ஏனெனில் அவர்கள் கிறிஸ்துவுக்காகப் பயணம் மேற்கொண்டவர்கள். பிற மக்களிடமிருந்து அவர்கள் வழியில் எதையும் பெற்றுக் கொள்ளவில்லை. இத்தகையோருக்கு உதவுவது நமது கடமை. இவ்வாறு, உண்மைக்காக உழைக்கும் அவர்களின் உடன் உழைப்பாளர் ஆகிறோம்.

**பதில்பாடல் :** ஆண்டவருக்கு அஞ்சி நடப்போர் பேறுபெற்றோர்

**நற்செய்தி : லூக்கா 18 : 1 - 8**

அக்காலத்தில் அவர்கள் மனந்தளராமல் எப்பொழுதும் இறைவனிடம் மன்றாட வேண்டும் என்பதற்கு இயேசு ஓர் உவமை சொன்னார்.”ஒரு நகரில் நடுவர் ஒருவர் இருந்தார். அவர் கடவுளுக்கு அஞ்சி நடப்பதில்லை. மக்களையும் மதிப்பதில்லை. அந்நகரில் கைம்பெண் ஒருவரும் இருந்தார். அவர் நடுவரிடம் போய், ”என் எதிரியைத் தண்டித்து எனக்கு நீதி வழங்கும்” என்று கேட்டுக் கொண்டேயிருந்தார்.நடுவரோ, நெடுங்காலமாய் எதுவும் செய்ய விரும்பவில்லை. பின்பு அவர், ”நான் கடவுளுக்கு அஞ்சுவதில்லை. மக்களையும் மதிப்பதில்லை. என்றாலும் இக்கைம்பெண் எனக்குத் தொல்லை கொடுத்துக்கொண்டிருப்பதால் நான் இவருக்கு நீதி வழங்குவேன். இல்லையானால் இவர் என் உயிரை வாங்கிக் கொண்டேயிருப்பார்” என்று தமக்குள்ளே சொல்லிக்கொண்டார்.”பின் ஆண்டவர் அவர்களிடம், ”நேர்மையற்ற நடுவரே இப்படிச் சொன்னாரென்றால், தாம் தேர்ந்துகொண்டவர்கள் அல்லும் பகலும் தம்மை நோக்கிக் கூக்குரலிடும்போது கடவுள் அவர்களுக்கு நீதி வழங்காமல் இருப்பாரா? அவர்களுக்குத் துணைசெய்யக் காலம் தாழ்த்துவாரா? விரைவில் அவர்களுக்கு நீதி வழங்குவார் என நான் உங்களுக்குச் சொல்கிறேன். ஆயினும் மானிடமகன் வரும்போது மண்ணுலகில் நம்பிக்கையைக் காண்பாரோ?” என்றார்.

**தியானம்:** எம்மைவிட்டு இறந்துபோன ஆத்துமாக்களுக்காக விசேடமாக செபிக்கும் இந்நாட்களில் நற்செய்தியில் கூறப்படும் விதவையைப் போன்று நாங்களும் நம்பிக்கையிழக்காது, சோர்வுறாது, தொடர்ந்து செபிக்கவேண்டும் என்று தெரிவிக்கப்படுகிறது. நீதியற்ற அரசனிடம் தொடர்ந்து விண்ணப்பித்தனால் அவளது கோரிக்கைக்கு அரசனால் இணங்க முடிந்தாலும், அதிலும் மேலாக இரக்கத்தின் அரசரான எமது பரலோக தகப்பன் எமது விண்ணப்பங்களுக்கும் மண்றாட்டுக்களுக்கும் இரங்குவார் என்பதே இன்றைய நற்செய்தியின் உட்கருத்தாகும். எமது பரலோக தகப்பனை நோக்கி நம்பிக்கையோடு செபிப்பதற்கு இறைமகன் இயேசு எமக்கு கற்றுக் கொடுத்திருக்கின்றார். அது மட்டுமல்ல செபிப்பதன் முக்கியத்துவத்தை அவர் இவ்வுலக பகிரங்க வாழ்வில் பல சந்தர்ப்பங்களில் சுட்டிக்காட்டி, இறைமகன் இயேசுவின் நற்செய்திப் பயணத்தில் அவர் செபிக்காத வேளைகள் எதுவுமில்லை எனப்படும் அளவிற்கு நற்செய்தியில் பல ஆதாரங்கள் உள்ளன. இறைமகன் இயேசுவைப் பின்பற்றிய பலர் செபித்தலின் முக்கியத்துவத்தை எமக்கு எடுத்துச் சொல்லியுள்ளார்கள். அன்னை மரியாள் இவ்வுலகை மீட்க தினமும் செமாலை ஓதுமாறு வேண்டுகோள் விடுக்கின்றாள். அன்னை தெரேசா அதிகாலையில் தனது நாளாந்த கடமைகளின் முன்னர் ஒருமணி நேரத்திற்கு மேலாக பரிசுத்த நற்கருனை முன்னிலையில் செபித்தாள். நமது தீமைகளுக்கெல்லாம் செபித்தலே மாற்று மருந்து. நாம் பெறும் அருள்வரங்களுக்கெல்லாம் அது ஆணிவேர் என திருத்தந்தை 13ம் சிங்கராயர் கூறியுள்ளார். எனவே நாமும் எமது பாவநிலைகளிலிருந்து விடுபட, எமது நாட்டில் அமைதி, சமாதானம் ஏற்பட, எமது சமூகத்தில் ஒற்றுமை, புரிந்துணர்வு ஏற்பட, எமது குடும்பங்களில் அன்பு, அன்னியோன்னியம் ஏற்பட மட்டுமல்ல, அனைத்திற்கும் மேலாக எங்கள் ஒவ்வொருவருக்கும் அமைதியான மரணம் கிடைக்க இடைவிடாது செபிப்போம்.